திரு. ஈ. எம். நடராசன் : தலைவரவர்களே, கோவை மாவட்டத்தில் பர்கூர் மலைப்பகுதியில் வாழ்கின்ற மக்கள் எந்தவிதமான முன்னேற்றமும் இல்லாமல் பின்னடைந்த நிலையில் இருக்கிறார்கள். எனவே அந்தப் பகுதியை தனி வளர்ச்சி வட்டாரமாகக் கருதி அந்தப் பகுதி மக்கள் முன்னேற தமிழக அரசு வழிவகை செய்யுமா?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : பர்கூர் பகுதியை அந்த முறையிலே மாற்றியமைக்க வேண்டுமென்று கோவை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் கேட்டிருக்கிறார்கள். ஆனால் மத்திய அரசாங்கத்தின் விதிமுறைகளின்கீழ் அது வராத காரணத்தால் அதை நல்ல முறையில் வட்டார வளர்ச்சிப் பகுதியாக மாற்றக் கூடிய நிலை இல்லை. இந்த ஆண்டு நிதி நிலை தட்டுப்பாடாக இருக்கிற காரணத்தால் புதிய அமைப்பை எடுத்துக்கொள்ளக் கூடாது என்று அவர்கள் கட்டளையிட்டிருக்கிறார்கள்.

'கிராம நலம்'

* 469 வினா.—**திரு. பெ. மலைச்சாமி :** மதிப்பிற்குரிய உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

அரசால் நடத்தப்பெறும் 'கிராம நலம்' என்ற மாதப் பத்திரிகைக்கு ஆண்டொன்றுக்கு ஆகும் செலவென்ன?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : சந்தா தொகை ரூ. 27,681-ம் இந்திய அரசினரால் அளிக்கப்பட்ட உதவித் தொகை ரூ. 13,000-ம் வரவு வைத்த பின்னர் 1966–67 ஆண்டில் செலவிடப்பட்ட நிகரத் தொகை ரூ. 1,15,064.

திரு. பெ. மலைச்சாமி : தலைவரவர்களே, இந்தப் பத்திரிகையை அரசே நடத்தவேண்டிய முக்கிய காரணமென்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : கிராம வளர்ச்சியைப் பற்றியும், வட்டார வளர்ச்சியைப் பற்றியும் முன்னேற்றங்களைப் பற்றியும், அதுபற்றி அரசாங்கம் அவ்வப்பொழுது விடுக்கின்ற அறிவிப்புகளைப்பற்றியும் அந்தந்தப் பகுதி மக்களுக்கு அறிவிப்பதற்காக இந்த விளம்பரப் பகுதி நீண்டகாலமாகத் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவண்ணாமலை பஸ் நிலையத்தைப்பற்றிய 466-வது வினாவின்போது, ஒரு துணை வினாவைக் கேட்க நகராட்சித் தலைவர் திரு. தா. விஜயராஜ் அவர்கள் கையை உயர்த்தியதை நான் கவனிக்கவில்லை. ஆதலால் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் இசைந்தால், அவ்வுறுப்பினர் அதுபற்றி ஒரு துணை வினா கேட்க நான் இப்பொழுது அனுமதிக்கிறேன்.

திரு. தா. விஜயராஜ் : ஏற்கனவே உள்ள பஸ் நிலையம் சரியாக இல்லை என்ற காரணத்தால் புதிய பஸ் நிலையம் ஒன்று கட்ட

1967 நவம்பர் 27]

அரசாங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டு அதனுடைய வேலை மிகவும் நிதானப் போக்கிலே நடந்துகொண்டு இருக்கிறது. ஆகவே உடனடியாக அந்த வேலையைச் செய்வதற்கு சர்க்கார் முயற்சி செய்யுமா? ஏற்கனவே அரசாங்கத்தால் கொடுத்த கடன் திருப்பிக் கொடுக்கப்பட்டு விட்டது, அதில் பாக்கியில்லை என்று அரசாங்கம் தெரிவிக்குமா? புதிதாக பஸ்நிலையம் கட்டுவதால் அதன்மூலம் அரசாங்கத்திற்கு வருவாய் வரும் என்ற காரணத்தால் இதை உடனடியாகக் கட்டுவதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : ஏற்கனவே கொடுத்த கடனை திருப்பிக் கொடுத்தார்களா இல்லையா என்ற தகவல் இல்லை. கொடுத்திருந்தால் மகிழ்ச்சி. ஏற்கனவே 3 லட்சத்து 98 ஆயிரம் ரூபாய் அனுமதித்ததற்கு முதல் தவணையாக 25 ஆயிரம் ரூபாய் கொடுக்கப்பட்டிருக்கிறது. தொடர்ந்து அந்த வேலை நடைபெறும். அது பயனுள்ளதாக இருக்கிறது என்று அரசாங்கம் நினைப்பதால் தான் வேலை தொடர்ந்து நடைபெறுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஏற்கனவே தள்ளிவைக்கப் பட்ட வினாக்கள் 450 முதல் 452 வரை இப்பொழுது எடுத்துக் கொள்ளப்படுகின்றன.

பதநீர் இறக்கும் உரிமம்

*வினா.—திரு. கொளத்தூர் கோதண்டம் : மதிப்பிற்குரிய முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) மதுவிலக்கு காரணமாக மரமேறும் தொழிலாளர்களுக்கு பதநீர் இறக்க லைசென்சுகள் உரிய காலத்தில் கொடுக்கப் படுவதில்லை என்பது உண்மையா?

(இ) ஆம் எனில், இதை மாற்றி அமைத்து லைசென்சுகள் உடனடியாகக் கொடுக்கும் உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : (அ) துறைப் பணியாளர்கள் சுறுசுறுப்பாகச் செயல்படவில்லை என்ற காரணத்தால் மரமேறும் தொழிலாளர்களுக்கு உரிமம் வழங்குவதில் தாமதம் எதுவும் ஏற்படவில்லை.

(இ) இக்கேள்வி எழவில்லை.

திரு. கொளத்தூர் கோதண்டம் : லைசென்ஸ்கள் வழங்கப் படுவது குறிப்பாக பருவகாலத்திற்குப் பிறகுதான் இது வரை வழங்கப்பட்டு வந்தது. இந்த அரசாவது டிசம்பர் மாதத் திற்குள் லைசென்ஸ்கள் வழங்குவதற்கு வழிவகை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : தலைவரவர்களே, எனக்குக் கிடைத்திருக்கின்ற தகவல்களின்படி லைசென்ஸ்கள் வழங்கப்படுவதில் தவக்கம் இல்லை. லைசென்ஸ்கள் வாங்கிக் கொள்கிறவர்கள் மட்டத்தில்தான் ஏராளமான தவக்கம் இருப்ப தாகத் தெரிகிறது.